பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 20 செவ்வாய்க்கிழமை 04 08 1992 UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 250

## — கிழக்கில் மீண்டும் அதிரடி —

# கரடியனாறில் 14 படையினர் பலி!

## ரோந்து அணி மீது புலிகள் தாக்குதல்

லண்டன், ஆக. 4

கிழக்கில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தொடர்கின்றன. நேற்று ரோந்து சென்ற ஸ்ரீலங்கா இராணுவ அணி மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 14 படையினர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயித்தியமலைக்கும், கரடியனாறுக்கும் இடையே ரோந்து சென்ற படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

ஆனால்—

நேற்று கிழக்கில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 14 படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா இராணுவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள மீனவர் மூவர் நேற்று விடுவிப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 4

விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் இருந்த மூன்று சிங்கள மீனவர்கள் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு விடுவிக்கப்பட்டு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தலைவயடி கடற் பரப்பில் வைத்து கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஆறு சிங்கள மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் மூவரே நேற்று விடுவிக்கப்பட்டனர்.

விடுவிப்பு நிகழ்ச்சிக்கு செய்தியாளர்களும், குருநகரில் உள்ள கடற்தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

பவுலு மாஷல் [வயது 52— சினக்குடா, திருமலை], கரேடிஸ் அப்பு கொடிப்பிலி சூரியாராச்சிகே [வயது 50 — கோணேஸ்வர் வீதி, திருமலை], அல்பேட் ரணசிங்க ஆராச்சிக்கே ரூபசிங்க [வயது 46 — ஆண்டான் குளம், திருமலை] ஆகியோரே விடுவிக்கப்பட்ட மூவருமாவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் வைத்து இன்று உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 4

விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட மூன்று சிங்கள மீனவர்களும் இன்று திருகோணமலையில் வைத்து அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றனர்.

இவர்கள் மூவரையும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பலில் நேற்று மாலை ஏற்றி திருகோணமலைக்கு கூட்டிச் சென்றனர்.

திருகோணமலையில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தில் வைத்து இன்று அவர்களது உறவினர்களிடம் அவர்களை ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-3)

## நல்லெண்ண அடிப்படையில் மீனவர் மூவரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஆக. 4

''நல்லெண்ணத்தின் அடிப்படையில் புரிந்துணர்வோடும், மனித நேயத்துடனும், எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் எடுத்த முடிவிற்கமைய, சிங்கள மீனவ நண்பர்கள் மூவர் இன்று விடுவிக்கப்படுகின்றனர்; அவர்களின் குடும்பத்தினரிடம் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.''

கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரனி மாஸ்டர் இவ்வாறு தெரிவித்தார்.

குருநகரில் உள்ள கடற்புலிகளின் அரசியல் பிரிவு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சிங்கள மீனவர் விடுவிப்பு வைபவத்தில் — மூன்று மீனவர்களையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்து— உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''எங்கள் கடற் பிரதேசத்தில் வைத்து கடந்த காலங்களில் நூற்றுக்கணக்கான தமிழ் மீனவர்கள் ஸ்ரீலங்காப் படைகளால் பிடிக்கப்பட்டு விடுதலை செய்யப்படாமல் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரிட்டன், சுவிஸ் தூதர்கள் நேற்று மன்னார் விஜயம்

பிரிட்டன் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் தூதர்கள் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தனர். ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகளும் அவர்களுடன் மன்னார் வந்தனர்.

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் ஈழத்தமிழ் அகதிகளின் நிலை குறித்து தூதுவர்கள் நேரில் ஆராய்ந்தனர்.

கடந்த வாரமும் தூதுவர்கள் மன்னாருக்கு வந்திருந்தனர் என்பதும்—

தாயகம் திரும்பிய அகதிகள் தங்கியிருந்த முகாம்களுக்கு நேரில் சென்று அகதிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர் என்பதும் தெரிந்ததே.

மீண்டும் நேற்று ஹெலிக்கொப்டரில் மன்னாருக்குச் சென்ற அவர்கள், அங்குள்ள முகாம்களுக்கு விஜயம் செய்தனர். மன்னார் அரச அதிபருடனும் கலந்துரையாடினர். [உ-3]

## மன்னாரில் அகதி முகாம் 10 ஆம் திகதி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 4

ஐ. நா. அகதிகள் தூதரகத்தில் மன்னார் தச்சனார் மருத மடுவில் அமைக்கப்பட்ட அகதிமுகாம் எதிர்வரும் 10 ஆம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்த திறப்புவிழா நிகழ்ச்சியில் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் ஜெனிவா தலைமையக அதிகாரிகளும் பங்கு பற்றவிருக்கின்றனர்.

40 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள பகுதியில் இந்த முகாம் அமைக்கப்பட்டு வருவதும்—

முதல் கட்டமாக அங்கு 650 குடும்பங்கள் தங்க வசதி செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த முகாமில் தமிழகத்தில் இருந்து திரும்பும் ஈழ அகதிகள் தங்க வைக்கப்படுவர் என்பது தெரிந்ததே. [உ-3]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 4

வடக்கு நித்திய வெட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் லெப். இயல்வாணன் அல்லது இதயன் [ஜோசப் ஜெயச்சந்திரன் - முல்லைத்தீவு], லெப். உலகேஸ்வரன் அல்லது கமல் [தேவதாஸ் மோகன் - மட்டக்களப்பு] ஆகிய இரு போராளிகளும் வீரமரணம் அடைந்தனர். [உ-3]

## விமானம் விடுவிப்பு

கொழும்பு, ஆக. 4

மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எயர் லங்கா விமானம் நேற்று விடுவிக்கப்பட்டது. [உ-10]

## ஹெலி நோட்டம்

சுழிபுரம், ஆக. 4

நேற்று நண்பகல் பத்துமணியளவில் பொன்னாலை, அராலித்துறை, மாதகல் ஆகிய பகுதிகளின் மீது ஹெலிக்கொப்டர் ஒன்று நீண்ட நேரம் வட்டமிட்டு நோட்டமிட்டது. [உ-28]

## அதிகாரிகள் வருமுன் அகதிகள் புறப்பாடு

லண்டன், ஆக. 4

தாயகம் திரும்பும் ஈழ அகதிகள் தமது சுய விருப்பத்தின் பேரிலேயே திரும்புகிறார்களா என்பதைக் கண்டறியும் ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் சென்னை வந்து சேர்வதற்கு முன்னரே, அங்கிருந்து முதல் தொகுதி அகதிகள் — 132 பேர் — நேற்று திருமலைக்கு அனுப்பப்பட்டுவிட்டனர்.

ஐ. நா. அதிகாரிகள் தாயகம் திரும்பும் அகதிகளைச் சந்தித்து உரையாடுவதற்கு வசதியாக, சென்னையில் இடைக்கால தங்கு முகாம் ஒன்றை தமிழக அரசு அமைத்

(6 ஆம் பக்கம் பார்க்க]

## கோப்ரல் சுட்டுக்கொலை

கொழும்பு, ஆக. 4

பலாலி முகாமில் கடமையாற்றிய இராணுவ கோப்ரல் ஒருவர், சக சிப்பாய் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரியவந்தது.

இந்த சிப்பாயை அநுராதபுரம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## விமானத்தில் 132 அகதிகள் நேற்று திருமலை திரும்பினர்

சென்னை, ஆக. 4

பதின்மூன்று குழந்தைகள் உட்பட 132 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று பிற்பகல் சென்னையில் இருந்து திருகோணமலைக்கு ஒரு தனி விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேபோல் எதிர்வரும் வியாழனிலும் மற்றொரு விமானம் மூலம் தமிழ் அகதிகள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தமிழக அகதிகள் மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர் சி. எம். இராமதாஸ் தெரிவித்தார்.

இம்மாதத்தில் மொத்தம் ஆயிரத்து 80 தமிழ் அகதிகள் விமான மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

மேலும் 2 ஆயிரத்து 700 தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு இம்மாதம் 15 ஆம் திகதிக்குப்பின் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## காலையில் வந்த குமண மாலை திருமலை திரும்பியது

நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்பல் நேற்று மாலை திருகோணமலை சென்றது.

கப்பலில் மேற்தட்டில் ஏற்றப்பட்டு வந்த எரிபொருள் ''பரல்''களும் மற்றும் சில பொருள்களும் மட்டும் நேற்று இறக்கப்பட்டன.

நாளை காலை மீண்டும் பருத்தித்துறைக்கு 'குமண' வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்து சேர்ந்ததும் எஞ்சிய பொருள்கள் இறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-5-162]

## கப்பலிலிருந்து தபால்கள் நேற்று இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 4

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட — ஆகஸ்ட் மாதத்துக்குரிய — ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று உடனடியாக கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ். செயலகத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

ஒரு தொகுதி அடையாள அட்டைகளும் நேற்று இறக்கப்பட்டன.

ஆனால் கப்பலில் எடுத்து வரப்பட்ட சுமார் 250 தபால் பொதிகளும் இறக்கப்படாததால்—

திரும்பிச் சென்ற 'குமண' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு மீண்டும் வந்து சேர்ந்த பின்னரே தபால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**குளம் அமைத்து - நீர் வளம் பெருக்குவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மட்டக்களப்பு மாவட்டத்தில்

# முஸ்லிம்கள் பயணம் செய்ய 3 நாட்களுக்கே பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களுமே முஸ்லிம் மக்கள் பிரயாணம் செய்வதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் உள்ள நாட்களாக படையினர் அறிவித்துள்ளனர்.

இந்த 3 நாட்களும் மட்டு நகரில் இருந்து கல்முனை வரையான 25 மைல் நீளமான வீதி நெடுகிலும் இராணுவத்தினர் காவலில் ஈடுபடுத்தப்படுவர்.

இதே போல மட்டுநகரிலிருந்து வாழைச்சேனை வரையான 20 மைல் நீள பாதை எங்கும் இராணுவம் காவலுக்கு நிறுத்தப்படும்.

முஸ்லிம் பயணிகளின் பாதுகாப்புக் கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அமைதிப் படையினர் கையாண்ட அதே பாணியிலேயே இந்த பாதுகாப்பு ஏற்பாடும் அமைந்துள்ளதாம்.

இதே வேளை—

தமிழ்ப் பயணிகளுக்கு பொலீஸார் பாதுகாப்பு அளிப்பதாகவும்— தமிழர்கள் தினமும் பயணம் செய்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த]

# யானையிடம் அகப்பட்டு தப்பிய சிறுவனின் அதிஷ்டம்

யாழ்ப்பாணம், ஆக. 4

யானையால் நன்கு தடவைகள் தூக்கி வீசப்பட்ட 13 வயதுச் சிறுவன் ஒருவன் அதிஷ்டவசமாகத் தப்பிக் கொண்டான்.

எனினும் யானை கொம்பால் (தந்தத்தால்) குத்தியதால் காயமுற்று இப்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விசுவமடுப் பகுதியில் நடந்த இச் சம்பவத்தில், குளக்கரையில் குளித்துக்கொண்டிருந்த சிறுவர்களை நோக்கி வந்த யானை ஒன்று கிருஷ்ணசாமி சிவபாலன் என்ற சிறுவனைப் பிடித்து மூன்று முறைகள் தூக்கி எறிந்தது.

மூன்று முறைகளும் யானைக்கு அருகில் வீழ்ந்த சிறுவன் நான்காவது முறை சற்றுத் தூரத்தே தண்ணீருக்குள் விழுந்ததால் மறைந்து விட்டான்.

யானை அங்கிருந்து செல்லவே சிறுவன் நீந்தி வந்து கரை சேர்ந்தான். எனினும் கொம்பால் (தந்தத்தால்) குத்தியதால் சிறுவனுக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது. (அ-15)

# ராணுவ தலைமை அதிகாரி பாலரட்ணராஜா நியமனம்!

மேஜர் ஜெனரல் வை. பாலரட்ணராஜா கடந்த சனிக்கிழமை முதல் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஸிரான்லி டீ சில்வா ஓய்வு பெற்றதை அடுத்து இவர் நியமிக்கப்பட்டார்.

இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலைப் பதவியாக தலைமை அதிகாரி (Chief of Staff) பதவி இருக்கிறது.

இராணுவத் தளபதி ஓய்வில் செல்லும்போது, விடுமுறையில் செல்லும்போது பதில் இராணுவத் தளபதியாகப் பணிபுரியும் வாய்ப்பு இராணுவத் தலைமை அதிகாரிக்குத் வழங்கப்படும். [த-எ]

# தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 4

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணை அமைப்புகளில் ஒன்றாகச் செயற்பட்டு வரும் தமிழீழ ஆய்வு நிறுவனம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் [Tamil Eelam Economic Development Organisation] எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழப் பொருள் வளங்களை இனங்கண்டு ஆய்வு செய்த முடிவுப் பொருளாக்குவதிலும் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதிலும் தமிழீழ பொருண்மிய [பொருளாதார] மேம்பாட்டிற்கான திட்டமிடல், சந்தைப்படுத்தல், தொழில் நுட்பம், பயிற்சி, வர்த்தகம் எனும் இன்னோரன்ன துறைகளில் வழிகாட்டும் நடவடிக்கைகளிலும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கடந்த காலத்தில் சேவையாற்றி வந்தது.

தற்பொழுது இந்நிறுவனத்தின் பரப்பெல்லை தமிழீழத்திற்கான தனித்துவமான பொருண்மிய கட்டமைப்பை உருவாக்குவதாக இருக்கையில், கடந்த காலச் செயற்பாடுகளை துரித கதியில் விரிவாக்கம் செய்ய வேண்டியுள்ள இன்றைய நிலையில் இந் நிறுவனத்திற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் எனும் பொருத்தமான தூய தமிழ்ப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. [த]

செங்கல்பட்டு சிறைச்சாலையில்

# 46 லட்சம் ரூபா செலவில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

சென்னை, ஆக. 4

சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செங்கல்பட்டுச் சிறைச்சாலையில் தமிழ்நாடு அரசாங்கம் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறைச்சாலையைச் சுற்றியுள்ள மதில்கள் உயர்த்தப்பட்டுக் காவல் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏ. கே. 47 ரைபிள்கள் ஏந்திய படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

46 லட்சம் ரூபா செலவில் தமிழ்நாடு அரசாங்கம் இச் சிறைச்சாலையை திருத்தி அமைத்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிக்க இச் சிறைச்சாலைக்குள் விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளதும் —

இவ்வழக்கின் பூர்வாங்க விசாரணைகள் கடந்த ஜூன் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமானதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும். [உ]

★ ★ ★

சுவீடன் உப்சலா பல்கலைக் கழகத்தின் சமய வரலாற்றுத் துறைப் பேராசிரியர் பீற்றர் ஷோல்க்கின் இரு விரிவுரைகள் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளன. "தமிழ்ப் பௌத்தத்தின் கலைப்பேறு", "இலங்கையிலும் கம்போடியாவிலும் இந்தியக்கலை" என்ற தலைப்புக்களில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் 11 மணி வரை அவர் விரிவுரையாற்றுவார்.

# உற்சவங்கள்

மட்டுவில் தெற்கு அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி கோவிலின் அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும். [த-31]

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 4

எழுதுமட்டுவாள்-விழுபளை ஸ்ரீ மீனாட்சி அம்பாள், மீசாலை வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். [உ-117]

★ ★ ★

சுழிபுரம், ஆக. 4

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை ஒட்டி நாளை சுழிபுரம் அறுபத்துமூவர் மடாலயத்தில் புராணபடனம், பூசை ஆகியன சிறப்பாக நடைபெறவுள்ளன.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 4

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரலட்சுமி நோன்பை முன்னிட்டு விசேட திருவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட அபிஷேகம், பூசைகளுடன் சுமங்கலி பூசை, நோன்புக் கயிறு வழங்கல் ஆகியனவும் இடம் பெறும்.

★ ★ ★

சித்தன்கேணி ஞானவைரவர் ஆலயத்தில் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி இன்று "பரமனை மதித்திடாப் பங்கயாசனயர்" என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். [அ]

# கருத்தரங்கும் களப்பயிற்சியும்

யாழ்ப்பாணம், ஆக. 4

பலாலி ஆசிரிய கலாசாலை, யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் யாழ். நாடக அரங்கக் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்தும் நாடகக் கருத்தரங்கும் களப்பயிற்சியும் நேற்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அரங்கில் ஆரம்பமானது. எதிர்வரும் 8 ஆம் திகதிவரை இப்பயிற்சி இடம்பெறும்.

# செஞ்சோலை இசைமாலை

செஞ்சோலை 'இசைமாலை' நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பில் — மகளிர் கல்லூரியிலும், நாளை புதன்கிழமை நீர்வேலியில் — அத்தியார் இந்துக் கல்லூரியிலும் இடம் பெறும்.

இரவு 8-30 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும். (இ)

# கொழும்பு மேயர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு, ஆக. 4

கொழும்பு மேயர் ரட்ணசிறீராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர எதிர்க்கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

கொழும்பு முன்னாள் மேயர் ஏ. எச். எம். பௌஸி உட்பட 18 பேர் இப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளை சட்டத்துக்கு முரணான முறையில் வழங்கியமை, நிதிக்குழுவின் முன் அங்கீகாரமின்றி நிதி வழங்கியமை, மாநகர நிதியை தனிப்பட்ட செலவினங்களுக்கு ஒதுக்கியமை போன்ற குற்றச்சாட்டுகள் மேயர் மீது சுமத்தப்பட்டிருப்பதாக ஜனாப் பௌஸி தெரிவித்தார். (த)

# யாழ் செஞ். கிளை நிர்வாகம் இடைக்கால சபையிடம்!

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிர்வாகத்தை ஐவர் கொண்ட இடைக்கால சபை நேற்றுப் பொறுப்பேற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் அலுவலகத்தில் வைத்து — அரச அதிபரினால் தெரிவு செய்யப்பட்ட இடைக்கால சபை உறுப்பினர்கள் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் முன்னாள் தலைவர் டாக்டர் நச்சினார்க்கினியன், செயலாளர் திரு. ச. சிவானந்தராசா ஆகியோர் நிர்வாகத்தை இடைக்கால சபையிடம் கையளிக்க அரச அதிபரின் அலுவலகத்துக்கு வந்திருந்தனர்.

முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபர் திரு. ஏ. ஸி. செபநாயகத்தை தலைவராக கொண்ட ஐவர் குழுவே இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ளது [உ-5]

# 'அத்த' வின் செய்தி தவறாம்

கொழும்பு, ஆக. 4

தென்பகுதியில் 874 பெண்கள் மற்றும் சிறுவர்கள் காணாமற் போயுள்ளனர் என்று 'அத்த' பத்திரிகையில் வெளியான செய்தி முற்றும் பொய்யான தகவல் என்று பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்திருக்கிறார். [த-எ]

# சுகாதார ஆய்வு

தெல்லிப்பழை, ஆக. 4

கிராமப்புற மக்களின் சுகாதாரக் குறைபாடுகள், அவற்றை தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு ஒன்றை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இணுவில், தாவடி, உடுவில் பகுதிகளிலேயே இந்த ஆய்வு தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதல் கட்டமாக இருப்பிட வசதி, குடிதண்ணீர் பிரச்சினை, மலசலகூட வசதி போன்ற விடயங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. (இ-98)

# நாளை

யாழ்ப்பாணம், ஆக. 4

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வலி. வடக்கு பிரதேச அங்கத்தவர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் கந்தரோடையில் உள்ள தமிழ்க் கந்தையா பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 4

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ், தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நாளை புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகின்றது. மேலும் பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதால், விண்ணப்பங்கள் நாளை வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

★ ★ ★

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். [த]

★ ★ ★

மிகவும் வறிய கிராமங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை செயற்படுத்துவது குறித்து யாழ். இந்து இன்ரறக்ட் கழகத்தினர் நாளை காலை 10 மணிக்கு கல்லூரியில் கூடி ஆராயவுள்ளனர்.


# 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி - 1992

மாவீரர் நினைவாக மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தால் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடாத்தப் படும். தமிழீழத்தின் அனைத்துக் கழகங்களும் போட்டியில் பங்கேற்க முடியும். போட்டிகளில் பின்வரும் பரிசுகள் தீர்மானிக்கப்படும்.

முதலிட அணி
இரண்டாமிட அணி
மூன்றாமிட அணி
போட்டிகளில் சிறந்த வீரர்
போட்டிகளில் சிறந்த பேற்றுக் காவலர்
இறுதிப் போட்டியில் சிறந்த வீரர்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

[1] சண் வர்த்தக விளம்பர சேவை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

[2] சக்தி மருந்தகம்
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

போட்டி மைதானம் யாழ். நகரை அண்மியதாக அமையும். போட்டி அட்டவணையுடன் மேலதிக போட்டி விதிகள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 08—08—92

குறித்த திகதிக்குள் கிடைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். [4933]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# தந்திரிமலை பகுதியிலிருந்து சிங்களவர் வெளியேற்றம்!

## அதனைத் தடுப்பதற்குச் சுவரொட்டிகள்

அநுராதபுரம், ஆக. 4

அநுராதபுரம் மாவட்டத்தின் தந்திரிமலை பகுதியில் உள்ள இரு கிராமங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேறி வேறிடங்களுக்குச் சென்று வாழத் தயாராகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தந்திரிமலை விகாரையின் பிரதம குரு கொல்லப்பட்டதும், அங்குள்ள இராணுவ முகாம் ஒன்று அண்மையில் விடுதலைப் புலிகளால் தாக்கி முற்றாக அழிக்கப்பட்டதையும் தொடர்ந்தே இந்நிலை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிங்கள கிராமவாசிகளுக்கு பொலீஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்க தந்திரிமலை விகாராதிபதி தமது செல்வாக்கைத் தீவிரமாகப் பயன்படுத்தினார்.

கிராமத்தின் மன்னர் போலத் திகழ்ந்து வந்த தேரோ கிராம மக்களுக்கு உணவு, உடை, மருந்து போன்றவற்றையும் வழங்கி வந்ததுடன் சச்சரவுகளையும் தீர்த்து வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 வருடங்களாக கிராமவாசிகள் இரவில் விகாரையிலும், காடுகளிலுமே தங்கிவந்ததாகவும், இரவில் கிராமத்தில் தங்குவது ஆபத்தானது என்று அவர்கள் கருதியதாகவும், கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

கிராமத்தை விட்டு வெளியேற வேண்டாம் என்று மக்களைக் கோரும் சுவரொட்டிகள் கிராமம் எங்கும் காணப்படுகின்றன. போதிய பாதுகாப்புத் தரப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. [த]

## எழுதுநர் போட்டிப் பரீட்சை:

## விண்ணப்பக் கட்டணத்தை ஏற்கத் தபாலகம் மறுப்பு!

### அளவெட்டி வாசிகள் அலைச்சல்!!

அளவெட்டி, ஆக. 4

அரசாங்க, மாகாண எழுதுநர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய கட்டணத்தை ஏற்பதற்கு அளவெட்டி தபாலக அதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

அதனால் பிரஸ்தாப பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பொருட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பி வேறு தபாலகங்களை நாடி அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிரஸ்தாப பரீட்சைக்குரிய கட்டணங்களை ஏற்பதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்கள் முன்னர் மறுத்து வந்தன. எனினும் கடந்த புதன்கிழமை [29-7-92] அரசாங்க அதிபருக்கும் தபாற்பகுதி உயர் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து கட்டணங்களை ஏற்றுக் கொள்ள இணங்கப்பட்டது.

ஆனால் அளவெட்டி தபாலகத்தில் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் கையிருப்பில் வைத்திருக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதால் பரீட்சைக் கட்டணத்தை ஏற்கமுடியாதிருப்பதாக அந்தத் தபாலக அதிகாரிகள் கூறுகிறார்கள். (அ-13)

## முயற்சி முறியடிப்பு

கொழும்பு, ஆக 4

உழவு இயந்திரப் பெட்டிக்குள் டோர்ச் பட்டரிகள், கற்பூரம், மோட்டார் சைக்கிளுக்குரிய உதிரிப்பாகங்கள் முதலியவற்றை மறைத்து வடக்கே கடத்திச்செல்ல எடுக்கப்பட்ட முயற்சியை பாதுகாப்புப் படையினர் கடந்த சனிக்கிழமை ஈரற்பெரியகுளம் சோதனைத் தடை முகாமில் வைத்து முறியடித்தனர்.

நான்கு உழவு இயந்திரப் பெட்டிகளினுள் அப்பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக ஆறு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். [த-எ]

## இளைஞர் கைது

கொழும்பு, ஆக. 4

மருதானை, கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் உள்ள சில வீடுகளில் இருந்து பொருள்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக இளைஞர் ஒருவரை பொலீஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை பொலீஸார் மீட்டனர். [த-எ]

## 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை

கொழும்பு, ஆக 4

போதைவஸ்துக் கடத்தல் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட 30 வயதான ஜேன் ஹொற்னா என்ற பெயருடைய நைஜீரியப் பெண்ணுக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. [த-எ]

## ரவிசங்கருக்கு விருது

மணிலா, ஆக. 4

இந்தியாவின் பிரபல சிதார் இசைக்கலைஞர் பண்டிட் ரவிசங்கர் பிலிப்பைன்ஸ் அரசு வழங்கும் ரேமன் மகஸேஸே பரிசைப்பெற தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

71 வயதான பண்டிட் ரவிசங்கர் இப்பரிசை இம்மாதம் 31 ஆம் திகதி மணிலாவில் நடைபெறும் வைபவம் ஒன்றில் பெற்றுக் கொள்வார். [illegible] பத்துலட்சம் ரூபாவும் வழங்கப்படும். (த-எ)

## ஊவா இளைஞர் கைதாவது மேலும் தொடர்கின்றது!

பசறை, ஆக. 4

ஊவாப் பகுதியில் சந்தேகத்தின் பேரில் இளைஞர்கள் கைது செய்யப்படுவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த வாரம் பசறை கனவரல்ல குரூப்பைச் சேர்ந்த சி. வி. ஈ டிவிஷனில் இருந்து 3 தமிழர்கள் சிவில் உடையில் வந்தோரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சண்முகம் ரவிச்சந்திரன் [வயது 26], கந்தையா பஞ்சநாதன் [வயது 32], பெருமாள் ராஜவேல் [வயது 28] ஆகிய மூவருமே கைதானவர்கள் ஆவர். [த]

## வட - கிழக்கு பொலீஸாருக்கு உடனடி இராணுவப் பயிற்சி

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் சகல பொலீஸாருக்கும் இராணுவப் பாணியிலான பயிற்சிகளை உடனடியாக வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இப் பொலீஸார் பகுதி பகுதியாக தெரிவு செய்யப்பட்டு அப்பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இவ்வாறான இராணுவப் பயிற்சி அவசியம் என பொலீஸ் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இதைத் தவிர வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பொலீஸ் நிலையங்களில் இராணுவப் பயிற்சி பெற்ற பொலீஸ் அணிகளை நிறுத்தி வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. [த]



## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்துக்கு பெண் எழுதுவினைஞர் தேவை. க.பொ.த. சாதாரணத்தில் சித்தியடைந்தவரும், ஆங்கிலம் எழுத, வாசிக்க அனுபவம் உள்ளவரும் 18 - 27 வயதுக்கு உட்பட்டவர்கள் 15-08-1992 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

**விக்னா கல்வி நிறுவனம்,**
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (சி-2977)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 28 — 11 — 1927

உதிர்வு: 05 — 07 — 1992

அமரர்

**வைத்திலிங்கம் பொன்னம்பலம்**

அன்பின் பிறப்பிடமாய், எங்கள் குடும்ப ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய், செயற்திறன் மிக்கவராய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! காலம் பல கடந்தாலும், உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [4-8-1992] செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊறணி,
வல்வெட்டித்துறை. [5216]


உ

ஓம் சக்தி

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

யாழ். வண்ணை, கன்னாதிட்டி.

தனந்தருங் கல்விதரு மொரு நாளுந் தளர் வறியா மனந் தருந் தெய்வ வடிவுந் தரு நெஞ்சில் வஞ்சமில்லா இனந் தரு நல்லன வெல்லாந் தரு மன்பரென் பவர்க்கே கனந்தரும் பூங்குழ லாள பிராமி கடைக் கண்களே.

அருள்மிகு காளியம்பாள் ஆங்கீரச வருட [1992-ம் ஆண்டு]
மஹோற்சவ கொடியேற்றம்
இன்று பகல் காலை 10 மணி

உங்களின் திருப்தியே எங்களின் சேவை

**கலக்ஷி புகைப்பட சேவை**

337, முதலாவது மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[சி-2987]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 05 — 1933

மறைவு: 04 — 08 — 1989

**அமரர் தம்பிராஜா நடராஜா**

(பிரதம லிகிதர், லோகி எஸ்ரேற்)

திதி: 01 — 08 — 1992

ஆலமரமான நீங்கள் வீழ்ந்து
ஆண்டுகள் மூன்றானதப்பா
வீட்டுக்கொரு தலைவன் இல்லையே - நீங்கள்
இட்ட விதையில் விளைந்த விழுதுகள் - நாங்கள்
இன்று விருட்சமாக பூத்துக் குலுங்கி நிற்கையிலே
பெருமையுடன் எமக்கு வாழ்த்துச்
சொல்ல இல்லையே - அப்பா
எங்களுக்காய் உங்கள் நலனையெல்லாம் உதறி
வாழ்ந்தீர்களே! நாளெல்லாம்
உங்கள் பிரிவால் தவிக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
மருதடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

'பவானி இல்லம்',
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [22027]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

City and Guilds of London Institute Part II Quantity Surveying - 1993 வகுப்புகள் 05 - 08 - 1992 புதன்கிழமை காலை 6-30 — 8-30 ஆரம்பமாகின்றன. Measurement திங்கள் - புதன் Estimating and Analysis of Prices செவ்வாய்-வியாழன். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, நாவடி. (21989)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை; ஆனந்தா சோதிட நிலையம், 249 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரம் - தினமும் பி. ப. 2 முதல் 6 வரை. (22007)

## சென்னை அருகே முகாம்!

சென்னை, ஆக. 4

விமான மூலம் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள தமிழ் அகதிகளைத் தங்க வைப்பதற்காக சென்னை அருகே முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. [த-எ]

## இனவாதத்தை தூண்டுகிறதாம்

கொழும்பு, ஆக. 4

சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சிலர் அமைத்துள்ள ஹெல உறுமய அணி நாட்டின் தென்பகுதியில் மீண்டும் இனவாதத் தீயை மூட்டுவதற்கு எத்தனித்து வருகிறது. இது மிகவும் ஆபத்தானது

சுதந்திரக்கட்சியில் மீண்டும் சேர்ந்துள்ள திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கா முன்கண்டவாறு குற்றஞ்சாட்டி உள்ளார். [த-எ]

## பீற்றர் ஷோக் கருத்துரை

குருநகர், ஆக 4

சுவீடன் உப்சலா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பீற்றர் ஷோக் யாழ் திருமறைக் கலாமன்ற சைவ சித்தாந்த ஆய்வுவட்டக் கருத்தரங்கில் பேச இருக்கிறார்.

நாளை புதன்கிழமை 4-00 மணிக்கு பிரதான வீதியில் உள்ள மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

கருத்தரங்கில் 'தமிழ்-பௌத்தத்தின் பிரச்சினைகளைத் தழுவிய ஆய்வு' என்னும் பொருளில் பேராசிரியர் பீற்றர் ஷோக் கருத்துரை நிகழ்த்துவார். [இ-51]

## விமான சேவையில் சாதனை

கொழும்பு, ஆக. 4

1990 ஆம் ஆண்டில் அதிக விமானப் பயணிகளை ஏற்றி இறக்கி '' ஏரோ புளோட் '' விமான நிறுவனம் சாதனை படைத்துள்ளது.

இவ் ஆண்டில் ஆயிரத்து 372 லட்சம் பிரயாணிகள் இவ் விமானத்தில் பயணம் செய்துள்ளனர்.

முன்னாள் சோவியத் யூனியனுக்கு அடுத்ததாக அமெரிக்க விமான சேவை 730 லட்சம் பேரைஏற்றி இறக்கி சாதனை மித்துள்ளது. [த-18]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 05 — 1929

மறைவு: 04 — 08 — 1991

**Dr. C. K. Thurairatnam**

(Retired Deputy Superintendent, Civil Medical Stores)


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

[21856]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 30 — 05 — 1916

விண்ணில்: 05 — 07 — 1992

அமரர்

**அல்போன்ஸ் பிலிப் இராசநாயகம்**

[ஓய்வு பெற்ற காங்கேசன்துறை களஞ்சிய உதவிப் பொறுப்பாளர் - பத்தாவத்தை, மயிலங்கூடல்]

அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இன்று 04-08-92 இல் இல்லத்தில் வேண்டுதல் உபசரணை நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இதில் கலந்து ஆத்ம சாந்திக்காக வேண்டும்படி அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளை.

பி கிருபராசா,
முறிவு. நோவு வைத்தியர்,
சிறுப்பிட்டி மத்தி.

[22014]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 01 — 1924

மறைவு: 17 — 07 — 1991

அமரர்

**பண்டிதர் நா. சோதிலிங்கம்**

[இளைப்பாறிய அதிபர், யா/றோ.க.த.க. பாடசாலை, கோண்டாவில்.]

திதி: 04-08-1992

அன்பினால் எமை எல்லாம் அரவணைத்து
வாழவைத்தீரே!
இன்று நாம் உமை இழந்து பரிதவிக்கின்றோம்!
உங்கள் ஆத்ம சாந்திக்காக நல்லூர் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, உறவினர்கள்.

''தமிழன் பாசறை'',
கொக்குவில்.

[22019]

---

## புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தாயே மன்றாடி நிற்கின்றோம் உன்னை

மண்வளமும் பொன் வளமும் ஒருங்கே பெற்று
மக்களெல்லாம் ஒற்றுமையாய் வாழும் தீவில்
பெருமக்கள் சிறுமக்கள் என்ற பேதமற்று
பெருமையுடன் வழிகாட்டும் பெருங்காடதனில்
கோயில் வயல் நாயகியாம் மாரியம்மன்
மின்னொளியும் தன்னொளியும் மிளிர
மிடுக்கான தோற்றத்துடன்
குடிகொண்டு கொலுவிருக்க
உள்ளமதை உருக்கின்ற அம்பிகையின் காட்சிகள்
உருப் பெற்று ஒளி பெற்று இருக்க
மன்னவளே எங்கள் அன்னை முத்துமாரியே!
மிளிர்கின்ற உன் காட்சிகளை
எப்போது காண்போம் அம்மா
மன்றாடி நிற்கின்றோம் தாயே உன்னை

புங்குடுதீவு த. தி. சிவதாசன்.

குறிப்பு: மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்முறை நடைபெறாத காரணத்தால், இன்று கொடியேற்ற தினத்தையொட்டி இக் கவிதை பிரசுரமாகிறது.

[21987]

---

## ★ இசைமாலை ★

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இசை மாலை நிகழ்ச்சி

இடம்: மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு. இன்று 04 — 08 — 1992
அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி. நாளை 05 — 08 — 1992

காலம்: இரவு 8-30 மணி

நுழைவுச் சீட்டுக்கள்:
ரூபா 100-/ இருவருக்குரியது
ரூபா 50/-, 25/- தனி ஒருவருக்குரியது
ரூபா 10/- பாடசாலை மாணவர்களுக்குரியது.

ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

"செஞ்சோலை" நிர்வாகத்தினர்.

[சி-3008]

---

## ஓராண்டாய் சொரியும் கண்ணீர்பூக்கள்



**அமரர் பழனி வெற்றிவேலு**

தோற்றம்: 12-06-1944

மறைவு: 16-08-1991

திதி: 04-08-1992

உங்கள் ஊனினை உருக்கி எமக்கு
உன்னொளி பெருக்கி, அன்பும் பண்பும்
நிறைந்து ஆனந்தமாய் எமை வளர்த்தீர்கள்
நீங்கள் பிரிந்து ஆண்டொன்று சென்றும்
எம் துயர் நீங்கவில்லை, கண்ணீர் ஓயவில்லை;
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்.

மயூரபவனம்,
மடத்தடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(5208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### திருகுதாளத்துக்கு இடம் கொடாதீர்

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பி விடுவதில் இந்திய அரசு மீண்டும் அவசரம் காட்டுகிறது. இந்த வகையில் இந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் பத்தாயிரம் அகதிகளை அனுப்பிவிடுவதற்கு இந்தியா திட்டமிட்டிருக்கிறது.

இந்தியாவும் ஸ்ரீலங்காவும் தமக்கிடையே ஓர் இணக்கத்திற்கு வந்து தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளை இங்கு திருப்பி அனுப்ப இவ்வருட ஆரம்பத்தில் ஏற்பாடு செய்திருந்தன.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழ் அகதிகளின் சுய விருப்பம் இல்லாமலே, அவர்களைப் பலவந்தப்படுத்தியும், பயமுறுத்தியும் இங்கு அனுப்புவதற்கு இந்தியா விரும்பியது. அவ்வாறே பல தந்திரங்களையும், ஏமாற்று வேலைகளையும் செய்து தமிழர்களைக் கழுத்தில் பிடித்துத் தள்ளியது. தனது எண்ணத்தை ஈடேற்றுவதற்கு ஏதோ விதமாக ஸ்ரீலங்கா அரசையும் வசப்படுத்தி தனது காரியத்தைச் சாதித்தது!

உண்மையை மூடிமறைப்பது எவ்வாறு? அகதிகள் பலவந்தமாக அனுப்பப்பட்டது அம்பலத்துக்கு வந்தது. திரும்பி வரும் அகதிகளுக்கு வழங்குவதாக ஒப்புக்கொண்ட சலுகைகள், ஊக்குவிப்புகள், நிவாரணங்களைச் சரிவரக் கொடுப்பதற்கு ஸ்ரீலங்கா அரசும் பின்னடித்தது.

அதனால் இந்தியாவின் அப்போதைய ''சுற்றுமாற்றும்'' தந்திரமும் பிழைத்துப் போயின. ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டம் பிசுபிசுத்தது!

பிடித்தாலும் பிடித்தான் புளியங் கொம்பைப் பிடித்தான் என்பது போல, இம்முறை ஐ. நாவின் அகதிகளுக்கான தூதரகத்தைக் கௌவிப் பிடித்துக் கொண்டிருக்கிறது இந்தியா.

அகதிகள் தாமாக விரும்பித் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முன்வந்தால் மட்டுமே அதற்கு அனுசரணையாக இருப்பது, வேண்டிய உதவிகளையும் செய்வது என்பது ஐ. நாவின் கொள்கை. அதன் பிரகாரம் ஈழத்தமிழ் அகதிகளை இங்கு அழைத்துவர இந்தியாவுக்கும் ஐ. நாவுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

ஆனால் அகதிகள் சுயவிருப்பத்தின் பேரிலேயே திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்பது இம்முறையும் உறுதி செய்யப்படுவதற்கான வழிமுறை எதுவும் இதுவரை வகுக்கப்படவில்லை! இந்தியாவும் ஐ. நாவும் இது சம்பந்தமான விதிமுறைகளில் (Modalities) இன்னும் கைச்சாத்திடவில்லை.

திருப்பி அனுப்பப்படவிருக்கும் அகதிகளின் பட்டியலை இந்தியா கொடுக்க, அதில் இருந்து அகதிகள் திரும்பிச் செல்லத் தாமாகவே விரும்புகிறார்களா என்பதை ஐ.நாவின் அகதிகளுக்கான தூதரகம் கண்டறிய வேண்டும்!

இது எப்படிச் சாத்தியம்? ஐ. நா. அதிகாரிகள் ஒவ்வொரு அகதியிடமும் நேரில் விருப்பம் அறிய வேண்டும். வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீராகுமுன் அகதிகளை இங்கு அழைத்து வந்து பலி கொடுக்கவும், பட்டினி போடவும் அனுசரணையாக இருக்கவேண்டாம். இந்தியாவின் திருகுதாளங்களுக்கு இடம்கொடுக்கவேண்டாம்.

அகதிகளை இலங்கைக்குக் கூட்டி வந்து முகாம்களில் வைத்துப் பராமரிக்கும் பணத்தில், அவர்களைத் தமிழகத்தில் வைத்தே ஐ. நாவால் பராமரிக்க முடியாதா?

# கொண்டாட்டங்கள், களியாட்டங்கள்

# போர்க்காலச் சூழலில் தேவை தானா?

**தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையின் யாழ். மாவட்டச் செயலகத்தினர் நடத்தும் மாதாந்தக் கலைவிழா கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது. திலீபன் அரங்கில் யாழ். மாவட்டச் செயலகத் தொழிற் சங்கப் பொறுப்பாளர் திரு. இமையவன் தலைமையில் நடந்த அக்கலைவிழாவில் —**

**விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் துணைப் பொறுப்பாளர் திரு. தேவர் ஆற்றிய உரையை இங்கு கட்டுரை வடிவில் தருகிறோம்**

இந்த மண்ணிலே — எமது பிரதேசத்திலே — இப்பொழுது இரண்டு விதமான நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒன்று, இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கலைவிழாக்கள் போன்ற சில நிகழ்வுகள். இந்த நிகழ்வுகள் மக்களை நல்வழிப்படுத்துகின்ற — நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மண் மீட்புப் போரிலே மக்களை பங்காளிகளாக மாற்றுகின்ற — புனிதப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றன.

1983 ஆம் ஆண்டு திட்டமிட்டு சிங்கள ஆட்சியாளர்களாலும், சிங்கள இனவெறியர்களாலும் நடத்தப்பட்ட இனக்கலவரத்தினை, அந்தக் கலவரத்தின் போது நிகழ்த்தப்பட்ட வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைச் சம்பவத்தை நினைவுபடுத்துகின்ற — அங்கு அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்களுக்கான அஞ்சலி நிகழ்வு — ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்க —

வெலிக்கடைப் படுகொலை நிகழ்ந்த — தமிழீழ மண்ணிலே துக்க தினமாக அறிவிக்கப்பட்ட அந்த ஜூலை 27ஆம் திகதியன்று 'ஒன்று கூடல்' என்ற பெயரில் விருந்துண்டு மகிழ்வுறுகின்ற கொண்டாட்ட நிகழ்வுகள் இன்னோர் புறத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன!

#### அரசு ஒரு புறம்

தமிழ் மக்களை கொன்று குவிப்பதற்காக எமது கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டை எத்தனை ஆயிரம் மக்களைக் கொன்று குவித்தேனும், யாழ்ப்பாணத்தை சுடுகாடாக மாற்றியேனும், அதனைக் கைப்பற்றியே தீருவேன் என்று போர் முழக்கம் செய்து படையணிகளை பலப்படுத்துகின்ற ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகள் ஒருபுறம்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற — தொடர்ந்தும் நடைபெறப்போகின்ற யுத்தத்தைப் பற்றி எந்தவித சிந்தனையுமின்றி தாமுண்டு — தம் வாழ்வுண்டு — திருவிழாக்கள் உண்டு — களியாட்டங்கள் உண்டு — பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உண்டு — ரீ. வி. உண்டு, டெக் உண்டு — என்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் கூட்டம் இன்னோர் புறம்.

#### போராளிகளும் இவர்களும்

எதிரியின் படையணிக்குள் நேருக்கு நேர் சென்று மோதி எதிரியின் முகாம்களை நிர்மூலமாக்கி, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தியாக வேள்வியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டிருக்கின்ற விடுதலைப்புலி வீரர்கள், வீராங்கனைகள் ஒருபுறமும்

காஞ்சிபுரம் சேலையுடுத்து, கனகாம்பரம் மலர் சூடி, புதுமணப்பெண்களைப்போல மங்கையரும், வெள்ளைக்காரன் சீமையிலிருந்து நேரடியாக வந்திறங்கியவர்களைப் போல இளைஞர்களும் சேர்ந்திருந்து ஒன்றுகூடுகின்ற நிகழ்வுகள் இன்னோர் புறமும் — நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

எமது வீரர்களால், வீராங்கனைகளால் தகர்த்து நாசமாக்கப்பட்ட கவச வாகனங்களுக்குப் பதிலாக புதிது புதிதாக கவச வாகனங்களைக்

ஆயிரம் ஆயிரம். ஒரு நேரச் சாப்பாடுமின்றி தவிக்கின்ற மக்கள் எத்தனை ஆயிரம்...; அவர்களைப் பற்றி நாம் சிந்திக்கின்றோமா...?

கடந்த காலப் பாதிப்புக்களினால் நிர்க்கதியாக்கப்பட்ட, பெற்றோரை இழந்த குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்ற 'செஞ்சோலை' சிறுவர் இல்ல வளர்ச்சி நிதிக்காக ஒரு இசைமாலை நிகழ்ச்சிக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு அன்பளிப்புச் சீட்டுக்களைப் பெறுவதற்கு நிதி

## எதிரி கவச வாகனத்துடன் சூழ நிற்க நாம் கைலாச வாகனம் செய்வதா?

கொள்வனவு செய்தும்,

எம்மவர்களால் சுட்டுவீழ்த்தப்பட்ட குண்டுவீச்சு விமானத்திற்குப் பதிலாக புதிய விமான அணிகளோடும் எமது தலைக்கு மேலே நின்று கொண்டிருக்கின்ற சிங்கள இனவெறி ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் ஒரு புறம்.

வைரவ சுவாமி வலம் வருவதற்கு மஞ்சம், அம்பாள் எழுந்தருளுவதற்கு கைலாச வாகனங்கள், வாலாம்பிகா தேவிக்கு சித்திரத்தேர், ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாளுக்கு புதிய சப்பறத்தில்

வசதி இல்லாதவர்கள், சித்திரத்தேர்கள் செய்வதற்கு - நாளை எதிரியினால் அழிக்கப்படப்போகின்ற மஞ்சங்கள் செய்வதற்கு — பத்தாயிரம், ஐயாயிரம், இரண்டாயிரம், ஓராயிரம் கொடுக்கின்றார்கள்.

#### சுதந்திரத்தின் பின் தாராளமாகச் செய்யுங்கள்

எதிரியானவன் கவசவாகனங்களோடு எமது மண்ணைச் சுற்றி நிற்கின்றான். யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றிவளைத்து நிற்கின்றான். நாங்கள் கைலாச

## பயனற்ற பட்டிமன்றங்கள் வேண்டாம்

வெள்ளோட்ட விழா; ஸ்ரீ சட்டநாதருக்கு புதிய கைலாச வாகனம் என்று —

குடாநாட்டின் எந்த மூலையில் பார்த்தாலும் திருவிழாக்கள், தவில் - நாதஸ்வரக் கச்சேரிகள்; வில்லிசை, மெல்லிசை, இன்னும் சிலகாலம் போனால் துள்ளிசையும் வந்துவிடுமோ என்று வேதனைப்படுகின்றோம்.

#### வழிபாடுகளுக்கு எதிரல்ல

இவற்றை நான் சொல்வதனால் ஏதோ நாங்கள் கோவில் வழிபாடுகளுக்கு எதிரானவர்கள் என்றோ; சமய நம்பிக்கைக்கு எதிரானவர்கள் என்றோ எண்ணிவிடாதீர்கள்.

1982 ஆம் ஆண்டு தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு பல லட்சம் ரூபா செலவில் ஒரு சித்திரத்தேர் செய்யப்பட்டது. அப்பொழுது அந்த இடத்தைச் சேர்ந்த எனது நண்பர்கள் சிலரிடம், சொன்னேன். நிச்சயமாக சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் அதை நாசம் செய்வார்கள் - தீயிட்டு எரிப்பார்கள் என்று எடுத்துச் சொன்னேன். சொன்னது நிகழ்ந்தது, தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுமிருக்கின்றது.

ஓரிரு வருடங்களுக்கு முன் நீங்கள் சுதந்திரமாகச் சென்று வழிபட்டுக் கொண்டிருந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு உங்களால் போகமுடியவில்லை. கீரிமலைக் கடற்கரைக்குச் சென்று தீர்த்தமாடி ஆடி அமாவாசை விரதம் அனுட்டிக்க முடியவில்லை.

எதிரியின் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் இடியுண்டு நாசமாய்ப் போன இந்துக் கோவில்கள் எத்தனை? தேவாலயங்கள் எத்தனை எத்தனை...?

#### இங்கே குண்டு போடமாட்டானா

துர்க்கையம்மன் ஆலயத்திற்கு குண்டு போட்டவன் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு குண்டு போடமாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

யாழ். குடாநாட்டிலேயே அகதிகளாக்கப்பட்ட மக்கள்

வாகனங்களோடு நின்று கொண்டிருக்கின்றோம்.

திருவிழாக்கள் செய்யவேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை திருவிழாக்கள் என்ற பெயரால் களியாட்டங்கள் நடத்த வேண்டாம் என்றுதான் நாங்கள் சொல்கின்றோம். நாளை எங்கள் மண்மீட்கப்பட்ட பின்னர், இங்கு நீங்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ முடியும் என்ற நிலை ஏற்பட்ட பின் சித்திரத்தேர்களைச் செய்யுங்கள்; மஞ்சங்களைச் செய்யுங்கள் கைலாச வாகனங்களைச் செய்யுங்கள் என்றுதான் கூறுகின்றோம்.

#### பயனுள்ள பட்டிமன்றம் நடத்துங்கள்

'பெண்மையில் சிறந்தவள் சீதையா...கண்ணகியா?' பட்டிமன்றங்கள். இங்கு எத்தனை கண்ணகிகள் சீரழிந்தார்கள் — சின்னாபின்னப்படுத்தப்பட்டார்கள்; எங்கள் மண்ணின் இந்தக் கண்ணகிகளைப் பற்றி யார் சிந்திக்கிறார்கள்... ?

'குற்றவாளிக் கூண்டிலே தசரத மகாராஜா' — இப்படி ஒரு பட்டிமன்றம்; தசரத மகாராஜாவைக் குற்றவாளியாகவோ, சுற்றவாளியாகவோ கண்டு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்...?

இந்த மண்ணிலே ஆயிரக்கணக்கான எமது உடன் பிறப்புக்களை, சகோதரிகளை பாலியல்வன்முறைக்குள்ளாக்கிய — எத்தனை ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த — 'அமைதிப் படை' என்ற பெயரில் 'ஆக்கிரமிப்புப் படை' யை அனுப்பி எத்தனையெத்தனை அழிவுகளை, அநியாயங்களைச் செய்திட்ட — இந்திய அரசை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துங்கள் — அக்குவேறு, ஆணிவேறாகப்பிய்த்தெறியுங்கள் — அகில உலகமும் அவர்களது அக்கிரமத்தைத் தெரிந்து கொள்ளட்டும்.

போலிக் காந்திகளின் முகமூடிகளைக் கிழித்தெறியுங்கள். அது நாட்டுக்கு தேவையான நல்ல பணி.

இங்கு எம்மால் நடத்தப்படுகின்ற இந்தக் கலைவிழாக்கள் இந்த மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போராட்டத்தைப் பற்றியும், இந்தப் போராட்டத்தில் நீங்கள் எல்லோரும் எங்களோடு இணைந்து நிற்க வேண்டிய தன் அவசியத்தைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன.


எல்லையில் பத்தாயிரம் எதிரி வந்து நிற்கின்றான். எத்தனை லட்சம் பேர் இங்கிருக்கின்றோம். அத்தனை லட்சமும் எங்களோடு சேர்ந்து நின்றால் எதிரியை எல்லையிலேயே நாங்கள் விரட்டிவிட முடியும். நீங்கள் எல்லோரும் எங்களோடு சேர்ந்து நின்று இந்தத் தமிழீழப் போராட்டம் வெற்றி பெற உதவுங்கள். ★

## இராணுவத்தின் 'பாஸ்' இன்றி வவுனியாவில் வசிக்கத் தடை

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இராணுவத்தின் 'பாஸ்' இன்றி வசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலீஸார் வழங்கிய நிரந்தர அல்லது தற்காலிக வதிவிட அனுமதி அட்டை வைத்திருக்காதோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவம் எச்சரித்துள்ளது. இது தொடர்பான சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது. (த-எ)

உ




### அருள் சுரக்கும் ஐயன்

பல்லவி

நல்லைப்பதி முருகன் நலங்கள் தருங்குமரன்

அநுபல்லவி

வல்ல வடிவேலேந்தும் வள்ளி மணவாளன்
இல்லையென்னா தருளை ஈந்திடு மீராறு கையன்
(நல்லை)

சரணம்

தில்லைச்சிவன் மைந்தன் சிங்கார வடிவேலன்
அன்னையும் கரையவைக்கும் கருணாம்ருத வழகன்
நல்லோர்கள் மலிந்துறையும் நல்லூர்த் தலந்தனிலே
எல்லோர்க்கும் அருள்சுரக்கும் ஐயனே வேல்முருகா
(நல்லை)

— எஸ். ஆர். திருஞானசம்பந்தன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதேச சபைச் செயலாளர் பதவி உ. அதிபரிடம் இல்லை

பிரதேச சபைகளின் செயலாளர்களாகப் பதவி வகித்து வந்த உதவி அரசாங்க அதிபர்களிடம் இருந்து அந்தப் பொறுப்பு நீக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாண சபை மேற்கொண்டுள்ளது.

பிரதேச சபைகளின் செயலாளர் பதவிகளுக்கு உள்ளூராட்சி சேவையைச் சேர்ந்த தரம் I - எழுதுநர்களையும், அதிசிறப்பு வகுப்பு எழுதுநர்களையும் மாகாணசபை இப்போது நியமித்து வருகிறது.

பிரதேச சபைச் செயலாளர் பதவிகளுக்கு உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்களையே நியமிக்க வேண்டும் என்று நீண்ட காலமாக வற்புறுத்தப்பட்டு வந்தது.

இந்த வகையில் பூநகரி, நெடுந்தீவு, கரைச்சி, சாவகச்சேரி பிரதேச சபைகளுக்கு உள்ளூராட்சி எழுதுநர் - தரம் I ஐச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் வடக்கு - கிழக்கு மாகாண சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

[அ-126-117]

## நல்லூரில் இன்று

நல்லூர் உற்சவகாலத்தை முன்விட்டு இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் [மாலையில்] — பார்வதி சிவபாதத்தின் இசைக் கச்சேரியும். சாந்தன் இசைக்குழுவினரின் பக்திப்பாடல்களும்.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] — 'கானசுதாவாரிதி'' பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் கந்த புராணக் கதாப்பிரசங்கம்;

★ நல்லை ஆதீனத்தில் — பி. ப. 2 மணிக்கு கந்தபுராணப் படிப்பு; பி. ப. 3 மணிக்கு பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [அ-126-30]

## அதிகாரிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது.

அந்த முகாமுக்கு ஐ: நா. அதிகாரிகள் நேற்றிரவு வந்து சேரவிருந்தனர்.

எனினும் அதற்கு முன்னதாக நேற்றுக் காலையிலேயே முதல் தொகுதி அகதிகள் விமானம் மூலம் திருமலைக்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

தாயகம் திரும்பும் அகதிகளில் பெரும்பாலானோர் அவர்களின் விருப்பம் இன்றியே திருப்பி அனுப்பப்படுவதாக அமைப்பு ஒன்றின் பிரதிநிதி தெரிவித்தார்.

## சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை அதிகாரி திரு. சுவான் சூவும், கடற் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு ஸ்டனி மாஸ்ரரும் விடுவிப்புப் பத்திரத்தில் கைச்சாத்திட்டனர்.

விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் விடுவிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

# மனிதர் மூளையுடன் இயங்கும் பெண் குரங்கு

இளைஞனின் மூளையை குரங்குக்குப் பொருத்தும் சத்திர சிகிச்சையில் கிழக்கு ஜேர்மன் — (முன்னாள்) சோவியத் யூனியன் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இரு நாட்டு விஞ்ஞானிகளும் இணைந்து, விபத்தில் இறந்த ஓர் இளைஞனின் மூளையை ஒரு பெண் குரங்கிற்கு வைத்து சத்திரசிகிச்சை செய்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன் கிழக்கு பெர்லின் மருத்துவ ஆராட்சி நிலையம் ஒன்றில் 18 மணி நேரம் இத்தச் சத்திர சிகிச்சை நடைபெற்றது.

மிகமிக இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இந்த சத்திர சிகிச்சை பற்றிய விவரம் அது வெற்றியளித்திருப்பதை அடுத்து இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கிறது.

இறந்த இளைஞனின் ஜேர்மன் மொழியை இக்குரங்கு இப்போது சரளமாக பேசி வருகிறது. எனினும் குரங்கின் குரலொலியை தெளிவாகக் கேட்டறிவதில் சிக்கல் இருப்பதாகக் கூறப்படுகிறது

பெயரைக் கேட்டால் இறந்த இளைஞனின் 'ஹன்ஸ்' என்ற பெயரையே குரங்கு முதலில் கூறுகிறது. ஆனால் தன்னிலையை உணர்ந்தால் 'கிறிடெல்' என்று தனது சொந்தப் பெயரைக் கூறுகிறது.

அத்துடன் இளைஞனின் குறும்புச் செயல், பேச்சுகள் போன்றவற்றையும் செய்கிறது.

ஓர் ஆணின் மூளையை பெண் குரங்குப் பொருத்தியதும், மாறுபாடான செயற்பாடுகளுக்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்பட்டது.

விபத்தில் மாண்ட இளைஞனின் மூளையை உடனே பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சி நிலையத்தில் எமக்கு பெண் குரங்குதான் கிடைத்தது என்றனர் விஞ்ஞானிகள்.

## கரடியனாறில் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. நேற்று நள்ளிரவு அறிவித்தது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் 34 படையினர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

கிழக்கில் விடுதலைப் புலிகள் தமது அதிரடித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருப்பதால் தமது இராணுவ ரோந்து முறைகளில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை இருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் கேர்ணல் முனசிங்க கடந்த வாரம் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். [உ-10]

## கப்பலிலிருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை இறக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு யார் பொறுப்பு? என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். ஒவ்வொரு முறையும் கப்பல் வரும்போது, தபாற் பகுதி இப்படிக் ''கோட்டை விடுவதா?'' என்று அங்கலாய்க்கிறார்கள்!

[அ-உ-3]

## நல்லெண்ண...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு நிர்க்கதியாக வாழ்கின்றன.

''இந் நிலையிலும் நாம் மனிதாபிமான அடிப்படையில் சிங்கள மீனவர் மூவரையும் விடுவித்து, அவர்களின் குடும்பத்தினரின் இன்னல் களைந்[illegible] முடிவு [illegible]'' என்று [illegible] மேலும் தெரிவித்தார். [உ-5]

# ஒலிம்பிக்போட்டி முடிவு

லண்டன், ஆக. 4

ஒலிம்பிக் பந்தயங்களில் நேற்று முன்தினம் வரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின்படி, முன்னணி வகிக்கும் நாடுகள் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண். |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 32 | 22 | 20 |
| அமெரிக்கா | 17 | 22 | 20 |
| ஜேர்மனி | 14 | 10 | 19 |
| சீனா | 11 | 16 | 08 |
| ஹங்கேரி | 10 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 07 |
| பிரான்ஸ் | 06 | 04 | 12 |
| தென் கொரியா | 06 | 03 | 05 |
| ஸ்பெயின் | 06 | — | — |
| கனடா | 05 | 01 | 05 |
| இத்தாலி | 04 | 05 | 07 |
| ருமேனியா | 04 | 05 | 06 |
| பிரிட்டன் | 04 | 03 | 05 |
| ஜப்பான் | 03 | 05 | 07 |
| போலந்து | 03 | 04 | 06 |
| கியூபா | 03 | 02 | 05 |
| செக்கொஸ்லேவேகியா | 02 | 02 | 01 |
| நோர்வே | 02 | 02 | — |
| துருக்கி | 02 | 01 | 01 |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| பிரேஸில் | 01 | 01 | — |
| கிரேக்கம் | 01 | — | — |
| வடகொரியா | 01 | — | 02 |
| எஸ்தோனியா | 01 | — | 01 |

# விடுதலைப் புலிகள் எங்களை நண்பர்களாக மதித்தனர்

## விடுவிக்கப்பட்ட மீனவர் நன்றி உரை

யாழ்ப்பாணம், ஆக. 4

''யாழ்ப்பாணத்தில் நாங்கள் கரையொதுங்கிய நாளில் இருந்து இன்று விடுவிக்கப்படும் வரை நன்கு உபசரிக்கப்பட்டோம். விடுதலைப் புலிகள் எங்களை நண்பர்களாக மதித்து பராமரித்தனர். 'ஐயா', 'ஐயா' என்று அவர்கள் என்னை அழைத்ததை என்றும் மறக்கமாட்டேன்.''

— இவ்வாறு விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட சிங்கள மீனவர்களில் ஒருவரான திருமலையைச் சேர்ந்த 46 வயதான அல்பேர்ட் ரணதுங்க ஆராச்சிகே ரூபசிங்கா தெரிவித்தார்.

தமிழில் நன்கு உரையாடக் கூடிய இவர், 1974 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். இங்கு கடற்றொழிலில் ஈடுபட்டவர்.

''1974 ஆம் ஆண்டில் நான் கண்ட யாழ்ப்பாணத்தின் செழிப்பான — வளமான — இடங்கள் இன்று அழிந்து கிடக்கின்றன. அரசின் அழிவு நடவடிக்கைகள் பற்றி சிங்கள மக்களுக்கு எதுவுமே தெரிவதில்லை.'' — என்றார் அவர்.

விடுவிக்கப்பட்ட மூன்று மீனவர்களும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். செஞ்சிலுவை அதிகாரிகளுடன் புறப்பட்ட சமயம் அவர்கள் மூவரும் கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் ஸ்டனி மாஸ்டரைக் கட்டித் தழுவி பிரியாவிடை பெற்றனர்.

[உ-5]

## உப ஜனாதிபதி தேர்தல்

இந்தியாவின் உபஜனாதிபதித் தேர்தலில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடுவது நிச்சயமாகி விட்டது.

இந்திரா காங்கிரஸ் மற்றும் எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் திரு. கே. ஆர். நாராயணனும் —

சுயேச்சை வேட்பாளராக திரு. ஜோகிந்தர் சிங்கும் போட்டியிடுகின்றனர்;

தேர்தல் இம் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தேவநேசம் சிற்றம்பலம்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், தற்போது உடுவிலில் வசித்தவருமாகிய திருமதி தேவநேசம் சிற்றம்பலம் மகிமைக்குள் பிரவேசித்தார்;

இவர் காலஞ்சென்ற டாக்டர் பாபு சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், சத்தியா, சந்திரா [ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை], காலஞ்சென்ற டாக்டர் கருணா பாலச்சந்திரன், சறோஜா [U. K], ரஞ்சினி, கலாநிதி சாந்தி றிச்சேட்சன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், அலெக்ஸ் பாலச்சந்திரன், றொஜர் றிச்சேட்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சோமலாவின் [U. K] அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற திருவாளர்கள் S. V, R. A, S. R வைரமுத்து, C. P வைரமுத்து ஆகியோரது சகோதரியுமாவார்;

இவரது நல்லடக்க ஆராதனை இன்று [04-08-92] காலை 9.00 மணிக்கு உடுவிலில் நடைபெறும்;

பெண்கள் பாடசாலை அருகாமை,
உடுவில்.

தகவல்:
P. டேவிட்

[22026]

## Dr. த. பொன்னம்பலம்

நீராவியடியை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் 03 - 08 - 92 ல் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் சரஸ்வதியின் கணவரும் மகேஸ்வரன், இந்திராணி, தெய்வேந்திரன், சயாதேவி, பாலச்சந்திரன், அமுதபதி, இராமச்சந்திரன் ஆகியோரின் தந்தையாரும், இந்திராதேவி, தேவராசா, சுமதி, மாணிக்க சிங்கம், மகாலட்சுமி, Dr. கந்தசாமி, சாவித்திரி ஆகியோரின்மாமனாரும், சுமித்திரா, நடராசா, தேவராணி, உமாராணி, இந்திரமதி, பானுமதி, வளர்மதி, மதிபாலன், ரேணுகா, மேனகா, மதிவதனன், வேணுகா, கீதபாலினி, Dr. குகாநந்தி, காலஞ்சென்ற மஞ்சுளா, இராதா, தனுசன், தாசன், அபிராமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு. ப. 11 மணியளவில் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்;

110, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
திருமதி சரஸ்வதி
[மனைவி]

[22032]

# மரண அறிவித்தல்

## சதாசிவம் சண்முகசுந்தரம்

[ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நல்லூர்]

சதாசிவம் சண்முகசுந்தரம் காலமானார். இவர் இராமாமிர்தம் [ஓய்வுபெற்ற ஆசிரியை, நாவலர் மகா வித்தியாலயம்] அவர்களின் அன்புக் கணவரும், ஜயந்தி, வசந்தி [ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்], சிறீதரன் [முது விஞ்ஞான பட்டதாரி, இந்தியா], காலஞ்சென்ற ரவிதரன், முரளிதரன் [இந்தியா], ஆனந்தி [யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவி] ஆகியோரின் தந்தையும்,

பு. கண்ணபிரான், தி. குஞ்சிதபாதம் ஆகியோரின் மாமனாரும் செந்தூரன், நிவேதினி, கௌதமன், ராஜாதித்தன், சாண்டில்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி புஷ்பவதி சண்முகநாதனின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04 - 08 - 92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு அன்னாரின் 185/9 கில்னர் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[22033]

தகவல்:
திருமதி இராமாமிர்தம்
(மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org